රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/23/02/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2015.12.01

**<u>பயிலுனர் பயிற்சிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் – 2015</u>**

2012 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுனர் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தை இழந்த 2012-03-31 ஆந் திகதிக்கு பட்டத்தை பூர்த்தி செய்துள்ள மற்றும் இலக்கம் 1745/11 மற்றும் 2012-02-14 ஆந் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளை பயிலுனர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலக்கம் අමප/15/0906/610/013-1 மற்றும் 2015-07-09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் படி தாங்கள் முன்வைத்துள்ள மேன்முறையீட்டைக் கருத்திற் கொண்டு இவ் ஆட்சேர்ப்புக்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு நீர் சமூகமளிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. நே (நேர்முகப் பரீட்சைக்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கம் மற்றும் குறித்தொதுக்கப்பட்ட நேரம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க அமையும்.)

**02. இதற்கமைவாக உமது தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை 2015-12-04 ஆம் திகதி கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவில் நடாத்தப்படும்.**

**03.** குறித்த அத்தினம் உரிய நேரத்தில் இந் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு உமக்கு இத்தால் அறியத் தருகிறேன். நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கையில் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை எடுத்து வரவேண்டும்.

- **I.** தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு அல்லது வேறு ஏற்றுக் கொள்ளப்படும் ஏதேனும் அடையாள அட்டை
- **II.** பிறப்புச் சான்றிதழ்
- **III.** பல்கலைக்கழக பட்டம் தொடர்பான ஆவணம்
- **IV.** பட்டம் தொடர்பான விபரமான பெறுபேற்று ஆவணம் ( Detailed result sheet)
- **V.** வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட பட்டமெனின் அப்பட்டத்தின் அங்கீகாரம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட கடிதம்
- **VI.** மேலே I,II,III,IV மற்றும் V இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களது போட்டோ பிரதிகள் . (அவ் போட்டோ பிரதிகளை நீர் அத்தாட்சிப் படுத்தியிருக்க வேண்டும்)
- **VII.** நீர் வேலையற்ற ஒரு பட்டதாரி என்பதை உறுதிப்படுத்துவதற்கான சத்தியக் கடதாசி ஒன்றை அல்லது பிரகடனம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் நீர் வேலையற்றவர் என்பதை நீர் வதியும் பிரதேச செயலாளர் பிரிவிற்கான பிரதேச செயலாளர் உறுதிப் படுத்தியிருக்க வேண்டும்.

VIII. நீர் பயன்படுத்தும் பெயர் மற்றும் பிறப்புச் சான்றிதழில் அல்லது ஏனைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் சிறியதொரு மாற்றம் ஒன்றிருப்பினும் அம் மாற்றத்தை நியாயப்படுத்தும் கட்டமைக்கப்பட்ட படிவத்தினூடு தயார் செய்யப்பட்ட சத்தியக் கடதாசி (குறித்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு வேறு பெயர்களின் மூலம் இனங் காணப்படுபவர் குறித்த ஒரு நபர் என்பதே ஆவார் என்பதை வெளிப்படுத்தி பயன்படுத்தப்படாத ரூ.50/= பெறுமதியுள்ள முத்திரை ஒன்றின் மேல் உமது கையொப்பத்தை இட்டு அதை பெறுமதியற்றதாக்குவதுடன் அதை சமாதான நீதவான் ஒருவரின் மூலமோ சத்திய ஆணையாளர் ஒருவர் மூலமோ உறுதிப்படுத்த வேண்டும்)

IX. நீர் நிரந்தரமாக வதியும் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் பெறப்பட்டு பிரதேச செயலாளரினால் சான்றிறுதி படுத்தப்பட்ட வதிவிட பத்திரம் (டீ.எஸ்.4 படிவம் மூலம் பெறப்பட வேண்டும்)

X. இந் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட இணைப்பு II படிவமும்

**04.** உரிய தினத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதவிடத்து இவ் ஆட்சேர்ப்புக்காக உள்வாங்கப்படுவதற்கு உமக்கு தேவைப்பாடு இல்லையென்று கருதப்படுவதுடன் இது தொடர்பாக இதன் பின் முன்வைக்கப்படும் எக் கோரிக்கையும் எக் காரணம் கொண்டும் கருத்திற் கொள்ளப்படாது.

**05.** இதற்காக உமக்கு போக்குவரத்து செலவோ வேறு ஏதும் படிகளோ வழங்கப்படாது.

**06**. இலக்கம் අමප/15/0906/610/013-1 மற்றும் 2015-07-09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் இலக்கம் 1745/11 மற்றும் 2012-02-14 ஆம் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பில் உள்ள அனைத்து ஏற்பாடுகளுக்கும் அமைய இவ் ஆட்சேர்ப்புக்காக தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் நீர் பூர்த்தி செய்திருக்க வேண்டும். இந் நேர்முகப் பரீட்சையானது உமது தகைமைகளை பரீட்சிக்கும் முகமாக நடாத்தப்படுவதுடன் இது உமக்கு நியமனம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கான உரிமை ஒன்றாக அமையாததுடன், இக்கடிதத்தை வழங்குவதினூடு மட்டும் நீர் நியமனத்தை பெற்றுக் கொள்ள தகுதியுடையவராக மாட்டீர் என்பதையும் தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

**07. பட்டதாரி பயிலுனர் ஆட்சேர்ப்பு தொடர்பாக 2015 ஒக்டோபர்,நவம்பர் மாதங்களில் இவ் அமைச்சில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தாங்கள் சமூகமளித்திருப்பின் இக் கடிதத்தின் பிரகாரம் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கான அவசியமில்லை என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.**

**08.** இது தொடர்பாக ஏதேனும் தெளிவு பெறுதல் அவசியமெனில் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**விசாரணைகளுக்கு**
தொலைபேசி இல. 011 2673560
011 2667277
011 2698432

இப்படிக்கு நம்பிக்கையுள்ள,

கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்